**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.274 /2017**

**Deposition of P.W.** 4

Name : திரு. கிறிஸ்துதாஸ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**10.09.2025**

A1 Present, A2 absent. Petititon filed and allowed.

முதல் விசாரணை–

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது கிள்ளியூரில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் புதுக்கடை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றிய போது 14.09.2001ம் தேதி நிலையத்தில் பணியாற்றிய முதல்நிலை காவலர் செல்வராஜ் என்பவருக்கு அரசு வழக்கறிஞர் அலுவலகம் நாகர்கோவில் மற்றும் துணைகண்காணிப்பாளர் அலுவலகம் ஆகிய இடங்களுக்கு பணிகள் நியமித்து அனுப்பினேன். செல்வராஜ் என்பவரை தபால் அலுவலாக நாகர்கோவில், குளச்சல் ஆகிய பகுதிகளுக்கு பணிநியமித்தேன். 15.09.2001ம் தேதி காலை 06.30 மணிக்கு அலுவல் முடித்து நிலையத்தில் ஆஜரானார். 14.09.2001ம் தேதி மாலை வெள்ளியோட்டில் வைத்து அவர்அலுவராக சென்று

கொண்டிருந்தவரை சிலர் வழிமறித்து தாக்கியதாக கேள்விப்பட்டேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. நான் கேள்விப்பட்டது போல் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை

**CASE NO.SC.274 /2017**

**Deposition of P.W.** 5

Name : திரு. ஐயப்பன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**10.09.2025**

A1 Present, A2 absent. Petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது மார்த்தாண்டத்தில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு 14.09.2001ம் தேதி மாலை 19.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும் போது புதுக்கடை காவல்நிலைய முதல்நிலை காவலர் செல்வராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைபடி நிலைய குற்ற எண். 1873/2001 பிரிவுகள் 294(பி), 353, 307 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.2. நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்

**<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகாரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யக்கூடிய சரத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. சிபாரிசின் அடிப்படையில் கடுமையான சட்ட பிரிவின் அடிப்படையிா பொய்யாக வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன வகையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பின்னிட்டு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1–க்கு காயங்கள் இல்லை என்றால் சரிதான்.

**<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை